**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.64/2025** |
| Deposition of witness | : | P.W.3 |
| Name | : | ஜேம்ஸ் |
| Father's /Husband Name | : | காத்தான் |
| Village | : | எட்டியலூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 52 |
| Occupation | : | கம்பிபிட்டர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05th day of August 2025.
A1, A2 present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது எட்டியலூரில் குடியிருந்து கம்பிபிட்டர் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சௌமியா எனது 2 வது மகள். அவரை திருகண்ணபுரம் பிரபாகரன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளேன். அ.சா.2 எனது மனைவி. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள எனது ஊரைச் சேர்ந்தவர்கள். 23.02.2025 ம் தேதி மதியம் 03.00 மணியளவில் 2 வது எதிரி ஐயப்பன் எனது வீட்டிற்கு பக்கத்தில் உள்ள கொல்லை வேலியை பிரித்தார். ஏன் பிரிக்கிறாய் என்று அவரிடம் கேட்டேன். அப்போது 1 வது எதிரி என்னை யாருடா வேலியை பிரிக்க கூடாது சொல்ற குச்சிகாரி, தேவடியா மவனே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டிவிட்டு சென்றுவிட்டார்கள். அன்றைய தினம் மாலை 05.00 மணியளவில் அ.சா.1 சௌமியா எனது வீட்டு கொல்லையில் குளித்துக்கொண்டிருந்தார். அப்போது எதிரிகள் இருவரும் பாவாடையுடன் குளித்துக்கொண்டிருந்த எனது மகள் சௌமியாவை இழுத்துக்கொண்டு வாசல் வீதிக்கு கொண்டு வந்தார்கள். குச்சிகாரி மவனே என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில் தான் என்று எதிரிகள் இருவரும் அ.சா.1 ஐ பார்த்து மிரட்டினார்கள்.

அ.சா.1 ஐ 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார்கள். இது சம்மந்தமாக அ.சா.1 கொடுத்த புகாரில் 28 ம் தேதி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 23.02.2025 ம் தேதி கொடுக்கப்பட்டது. வேலியை பிரித்ததாக சொல்வதும் மகளை தாக்கியதாக சொல்லவது வெவ்வேறு நிகழவு என்றால் சரிதான். வேலி பிரித்ததாக சொல்லப்படும் சமயத்தில் எனக்கு எதுவும் காயம் ஏற்ப்பட்டதா என்றால் இல்லை. அந்த வேலி பிரித்ததாக சொல்லப்படும் கொல்லை சுந்தர் என்பவருக்கு சொந்தமான கொல்லை என்றால் சரிதான். சுந்தர் என்பவரிடம் நான் சுமார் பத்து வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன். வேலி பிரித்த விபரத்தையும் என்னை தரக்குறைவாக திட்டிய விபரத்தையும் நான் சுந்தரிடம்சொன்னேனா என்றால் சொன்னேன்.அ து சம்மந்தமாக அவர் புகார் எதுவும் கொடுக்க சொன்னாரா என்றால் இல்லை. சுந்தர் என்வரும் எதிரிகளும் வெவ்வேறு சமூத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சுந்தர் சொல்லும் வேலைகளை செய்வது என் பணி என்றால் சரிதான். நான் வேலை பார்த்த சுந்தர் கொல்லைக்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கொல்லைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 50 மீட்டர் இருக்கும் . எனது கிராமத்தில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் சுமார் 20-30 வீடுகள் இருக்கும் . நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தை எத்தனை நபர்கள் வேடிக்கை பார்த்தார்கள் என்றால் சுமார் 20 நபர்கள் வேடிக்கை பார்த்தார்கள். ஊரில் உள்ள நபர்களுக்கும் எனக்கு ஏதும் மனஸ்தாபம் உள்ளதா என்றால் இல்லை. சம்பவம் தொடர்பாக ஊரில் உள்ள நபர்களை விசாரித்தார்களா என்றால் அது பற்றிஎனக்கு தெரியாது. நான் மருத்துவமனயைில் இருந்தேன். சொல்லக்கூடிய தேதியில் எனது மகள் எனது வீட்டில் இல்லை என்றாலும் அதுபோல சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. சுந்தரின் தூண்டுதலின் பேரில் தான் சமூக ரீதியாக எதிரிகளை பழி வாங்க வேண்டும்

என்பதற்காக ஊரில் இருந்த எனது மகளை வரவழைத்து அவளை ஒரு கருவியாக பயன்படுத்தி எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுக்க வைத்து அதனை அனுசரித்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.05 12:53:31 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`